ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2371/50 - 2024 පෙබරවාරි මස 16 වැනි සිකුරාදා - 2024.02.16

*2371/50 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்*

*2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் இலக்கப் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 29 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

கொழும்பு 01,
*2024*, பெப்புருவரி *14*.

**ஒழுங்குவிதிகள்**

*2017* ஆம் ஆண்டின் *12* ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட *2021* ஆம் ஆண்டின் யூன் மாதம் *30* ஆந் திகதியிடப்பட்ட *2234/20* ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட *2021* ஆம் ஆண்டின் *06* ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளில் செய்யப்பட்ட முதலீடு) ஒழுங்குவிதிகள் அதன்கீழ், செய்யப்பட்ட எந்தவொரு விடயத்திற்கும் பங்கமின்றி இத்தால் ஒழிக்கப்பட்டு பின்வருவன பதிலீடு செய்யப்படுகின்றன :

> "*2021* ஆம் ஆண்டின் *6* ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் கீழ், நாட்டிற்கான பன்னாட்டு முறிகளிலும் இலங்கை அபிவிருத்தி முறிகளிலும் முதலீடு செய்யும் நோக்கத்திற்காக வெளிநாடுகளிலிருந்து கடன்களைப் பெற்ற எவரேனும் கடன்பாட்டாளர் கடன்களை மீளச் செலுத்தப்போதுமான வெளிநாட்டுச் செலாவணி மீதிகளை/காசுப்பாய்ச்சலைக் கொண்டிருக்காதவிடத்து, இலங்கை ரூபாவிற்கு அவற்றை மாற்றுவதன் மூலம் அவற்றைச் செலுத்த அனுமதிக்கப்படுகின்றனர்".

EOG *02-0134*

1A - PG 6650 — 404 (2024/02) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*